

நேற்று (29.06.2024) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (கலை பண்பாட்டு இயக்ககம்) சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், இந்து என்.ராம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை அரசு இராஜீவ் காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.14.56 கோடியில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார்!

சென்னை, ஜூன் 30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.06.2024) சென்னை அரசு இராஜீவ்காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ரூ.10.92 கோடி மதிப்பீட்டில் மூளை இரத்தநாளம்சார் கேத் ஆய்வகமும் (Biplane DSA), ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர்.ஐ இணக்கமான மயக்க மருந்து செலுத்தும் உபகரணம் மற்றும் கண்காணிப்பு சாதனங்கள், ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் இதயம் மற்றும் நுரையீரல் கருவி, ரூ.50.85 இலட்சம் மதிப்பீட்டில் அதிநவீன அல்ட்ரா சவுண்ட் இயந்திரம், அதிநவீன இரத்தநாள அடைப்பு நீக்கும் மற்றும் உறிஞ்சும் கருவி, அதிநவீன லேசர் கருவி, ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் போதை மருந்து கண்டறியும் ராண்டக்ஸ் மல்டிஸ்டாட் (தானியங்கி) கருவி, ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் காற்று மாசு அளக்கும் கருவி ஆகியவை தொடங்கி வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ரூ.10.92 கோடி மதிப்பீட்டிலான மூளை இரத்தநாளம் சார் கேத் ஆய்வத்தின் மூலம் மூளை இரத்தக்குழாய்களில் உண்டாகும் இரத்த உறைவு மூலம் ஏற்படுகிற திடீர் பக்க வாதத்தை கண்டறியவும், இரத்த குழாய்களில் ஏற்படும் உறைவை அகற்றும் மெக்கனிக்கல் திராம்பெக்டமி எனும் சிகிச்சையை வழங்கிடவும் இந்த கேத் ஆய்வகம் பயன்படுகிறது. மேலும், ரூ.1.2 கோடி மதிப்பீட்டிலான எம்.ஆர்.ஐ இணக்கமான மயக்க மருந்து செலுத்தும் உபகரணத்தின் பயன்பாட்டை பொறுத்தவரை மிகுந்த சத்தத்துடன் இருக்கும் எம்.ஆர்.ஐ அறையில் நோயாளிகளை ஓரிடத்தில் நீண்ட நேரம் அசையாமல் ஒத்துழைக்க பாதுகாப்பான மயக்க மருந்து அளிப்பது ஒரு பெரிய சவாலாகும். இத்தகைய சவால்களை கடந்து செல்ல, எம்.ஆர்.ஐ அறைக்குள் எம்.ஆர்.ஐ இணக்கமான மயக்க மருந்து செலுத்தும் உபகரணம் மற்றும் கண்காணிப்பு சாதனங்கள் உதவும். மேலும் இன்போசிஸ் நிறுவனத்தின் CSR திட்டத்தின் உதவியுடன், எம்.ஆர்.ஐ இணக்கமான மயக்க மருந்து செலுத்தும உபகரணம் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. ரூ.1.25 கோடி மதிப்பீட்டிலான இதயம் மற்றும் நுரையீரல் கருவியின் மூலம், இருதய துடிப்பை நிறுத்திவிட்டு, இருதயத்தில் உள்ள பகுதியில் அறுவை சிகிச்சை செய்யும் போது, நமது உண்மையான இருதயம் மற்றும் நுரையீரல் செய்யும் வேலையினை, CO2 எடுத்துவிட்டு O2 செலுத்தும்.

மேலும் இருதய அறுவை சிகிச்சைகள் நாளொன்றுக்கு 3 பேருக்கும், மாதமொன்றுக்கு 60 பேருக்கும் செய்யப்படுகிறது. USG இயந்திரத்தின் மூலம் சுவின் குறைபாடு அறியதல், கருவறை சிசு சிகிச்சை மேற்கொள்ளுதல், (Fetal Intervention) நுண்துளை சதை பரிசோதனை மேற்கொள்ளுதல் (Image guided Biopsy), புற்று நோய் கண்டறியவும், மூளையில் உள்ள இரத்தநாள அடைப்பு நீக்குவதற்கும், உடலில் வேறு பாகங்களில் உள்ள இரத்த நாள அடைப்பு நீக்குவதற்கும் இக்கருவி பயன்படுகிறது.

மேலும், அதிநவீன லேசர் கருவி எலும்பு கட்டிகளை கரைக்கும் சிகிச்சை, சிசு சிகிச்சை மற்றும் இரத்தநாள விரிச்சுருள் சிறைநோய் சிகிச்சைகளுக்கு இக்கருவி பயன்படுகிறது. ரூ.65 இலட்சம் மதிப்பீட்டிலான போதை மருந்து கண்டறியும் ராண்டக்ஸ் மல்டிஸ்டாட் கருவி பொதுவாக உட்கொள்ள பரிந்துரைக்கப்படாத போதை மற்றும் மயக்கம் தருகிற மருந்துகளை உட்கொண்டால் உடனடியாக என்ன மாதரியான மருந்து உட்கொண்டார் என்பதை கண்டுபிடிக்க முடியும். இதன்மூலம் அரசால் தடை செய்யப்பட்ட போதை வஸ்து உபயோகம் செய்தார் என்பதை நிரூபணம் செய்ய முடியும். தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஒரு இரத்த மாதிரியில் 29 வகையான போதை ஏற்படுத்தும் மருந்துகளை கண்டறிய முடியும். இரத்த மாதிரிகள் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து பெறலாம். இக்கருவி மூலம் இரத்த மாதிரியை 20 நிமிடங்களில் சோதிக்க முடியும். மாதிரி முடிவுகள் ஒரே நாளில் கொடுக்கப்படும். ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலான காற்று மாசு அளக்கும் கருவியை கொண்டு தூசி துகள்கள், காற்று மாசுக்கள், வெப்பநிலை, ஈரப்பதம், காற்று வீசும் திசை மற்றும் வேகம் அளவிடப் பயன்படுகிறது. இதன்மூலம் காற்றின் தரக்குறியீட்டை அளவிட முடியும். சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை சுற்றி 2 கிலோ மீட்டர் சுற்றளவில் மக்கள் நடமாட்டம் மிக அதிகமாக உள்ள சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், அலுவலகங்கள், குடியிருப்புகள் அடங்கிய பகுதிகளில் காற்று மாசுக்கள் அளவிடப்பட்டு உடனுக்குடன் தொடர்ந்து கைப்பேசிக்கு நேரடியாக தகவல் அனுப்ப இக்கருவி பயன்படுகிறது.

**சைதாப்பேட்டை சிறுவன் உயிரிழப்பு தொடர்பான கேள்விக்கு:**

பீகாரை சேர்ந்த சிறுவன் ஒருவன் 10 நாட்களுக்கு முன்னர் சைதாப்பேட்டையில் குடியேறியிருந்தான். அவன் உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்துள்ளான். அந்த சிறுவனின் வீட்டை சோதனை செய்த போது பழைய சாதம் மற்றும் மாசடைந்த குடிநீர் இருந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக சென்னை குடிநீர் வாரிய நிர்வாகம் குடிநீர் மாசடைந்துள்ளதா என்று அனைத்து இடங்களிலும் சோதனை செய்து வருகின்றனர். அந்த நீரை பருகியதால் சிறுவனின் இறப்பு ஏற்பட்டதா? என்று உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். நீரின் மாதிரியை எடுத்து பரிசோதனைக்கு ஆய்வு கூடத்திற்கு அனுப்பியுள்ளனர். மேலும் அந்த சிறுவன் சிகிச்சை எடுத்த மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சைகள் குறித்தும் கேட்டுள்ளோம். நானும் இன்று மாலை 6 மணிக்கு மாநராட்சி துணை ஆணையர், மெட்ரோ நிர்வாக இயக்குநர் அவர்கள் அடங்கிய குழுவினருடன் ஆய்வு செய்யவுள்ளோம்.

**நீட் தேர்வு பற்றிய கேள்வி:**

நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், நீட் தேர்வுக்கு விலக்கு கேட்பதும் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு மட்டும் தான். ஆனால் இன்று நீட் எதிர்ப்பு இந்தியா முழுவதும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையை ஏற்படுத்தியது தி.மு.க. அரசு தான். அது மட்டுமல்லாமல் நீட் தேர்வில் குளறுபடிகள் நடப்பது இன்று வெட்ட வெளிச்சமாகியுள்ளது. நீட் தேர்வு எழுதியிருந்த 1563 பேருக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டிருந்தது. அந்த மாணவர்களுக்கு மறு தேர்வு நடத்தப்பட்டது, ஆனால் அதில் 50 % மாணவர்கள் மறு தேர்வு எழுதுவதற்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நன்றாக படிக்கும் மாணவர்கள் என்றால் மறு தேர்வு எழுதுவதற்கு ஏன் வரவில்லை. இதில் இருந்து அந்த மாணவர்கள் முறைகேட்டில் ஈடுபட்டது உறுதியாகியுள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு பிரிவுகள் தற்போது பல்வேறு இடங்களில் முறைகேடு நடந்துள்ளதா என்று கண்டறிய சோதனை நடத்தி வருகின்றனர். இவை அனைத்தும் தி.மு.க. அரசு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக தான் சாத்தியமாகியுள்ளது.

நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும், கடந்த 1 ஆண்டுக்கு முன்னாள் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த தர்மேந்திர பிரதான் யாதவ் அவர்கள் தற்போது ஒன்றிய அமைச்சராக உள்ளார். கடந்த ஆண்டு நானும் துறையின் செயலாளர் அவர்களும் அவரை சந்தித்து நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு வேண்டும் என்று கோரியிருந்தோம். அவரும் அவரது மாநிலமான ஒடிசாவிலும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு இருப்பதாகவும், தங்களாலும் எதுவும் செய்யமுடியவில்லை என்று கூறியிருந்தார் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. தேரணிராஜன், துணை முதல்வர் மரு.கவிதா, பேராசிரியர் மரு.ராகவேந்திரா மற்றும் உயர் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (29.06.2024) சென்னை அரசு இராஜீவ்காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.14.56 கோடி மதிப்பீட்டில் அதிநவீன மருத்துவ உபகரணங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், துணை முதல்வர் மரு.கவிதா, பேராசிரியர் மரு.ராகவேந்திரா மற்றும் உயர் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

### ரூ. 3.12 கோடியில் நிர்வாக அனுமதி அறிவிக்கப்பட்டு விரைவில் உசிலம்பட்டியில்

# ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டும் பணி துவங்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் தகவல்!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப்பேரவையில் உசிலம்பட்டி தொகுதி உறுப்பினர் பி.அய்யப்பன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள், உசிலம்பட்டி தொகுதியில் ரூ.3.12 கோடியில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டும் பணி விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.**



இது குறித்து பேரவையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்ததாவது:-

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாய் திட்டத்தின் வலது பிரிவு கால்வாய்மூலம் ஆணையூர் கண்மாய்க்கு புதிய மடை கட்டுவதற்கு ரூ.3.12 கோடிக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகள் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையூர் கண்மாய்க்கு தண்ணீர் செல்கிறது. எனவே, ஆணையூர் கண்மாய்க்கு 58 கால்வாயிலிருந்து நேரடியாக மடை அமைத்து தண்ணீர் வழங்குவது மாதிரிதான் போடப்பட்டிருக்கிறது, tender விடப்படும் என்று தெரிவித்திருக்கிறோம்.

இது சற்றொப்ப 30 வருடங்களுக்கு முன்னாள் தலைவர் அவர்களால் துவங்கப்பட்ட ஒரு திட்டம். உசிலம்பட்டி வட்டாரத்தில் சுமார் 58 கண்மாய்கள் வறட்சியாக இருக்கிறது. ஆனால், அது ஊடே வைகை ஓடுகிறது. எனவே, அந்த கிராமங்களுக்கு 68 அடிக்கு தண்ணீர் வருமானால், அங்கே 72 அடி வைத்திருக்கிறோம். அதுவரை தண்ணீர் வருமானால் அதற்கு பிறகுதான் இந்த 58 கால்வாய் திட்டத்தில் தண்ணீர் எடுக்க முடியும். அதை 1996ல் நாங்கள் துவங்கிவிட்டு வந்தோம். அதற்கு பிறகு அது அப்படியே போடப்பட்டது.

கருமேனியாறுக்கு என்ன கதியோ அதே கதிதான் இதற்கும் ஏற்பட்டது. ஆனால், இந்தத் திட்டத்தை தலைவர் அவர்கள் மிகவும் நேசித்தார்கள். ஏனென்றால், வறட்சியான ஒரு பகுதிக்கு தண்ணீர் கொண்டு வருவது. ஆனால், அப்படியே போய்விட்டது. மறுபடி நாங்கள் வந்தபிறகுதான் 2022 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மறுபடியும் 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் பணம் ஒதுக்கியிருக்கிறோம். வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதில் என்னவென்று கேட்டால், ஒரு இடத்தில கால்வாய் வெட்டிக்கொண்டு வந்தோம். சில இடங்களிலே வெட்ட முடியாத நிலை இருந்தது. உயரமான கால்வாய், பாலம் மூலம் தண்ணீர் கொண்டு வருவோம்.

கன்னியாகுமரி வில்லுகுறியில் இருப்பதைபோல, வடஆற்காட்டில் மோர்தானா அணை இருப்பதை போல பாலங்களில் அமைகிற திட்டம். அது ஒரு காட்டு வழி. எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. ராத்திரி 8 மணிக்கு அங்கு சென்று பார்த்தேன். பாம்புகளாக இருந்த ஒரு ஊர் அது. அந்த பாலங்கள் எல்லாம் இப்போது தான் கட்டப்பட்டு வந்திருக்கிறது. எனவே, தண்ணீரை உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எடுத்தோம் என்றால், பின்னால் பல பிரச்சினைகள் வந்துவிடும். உங்களுக்கும் தண்ணீர் வர வேண்டும். அதே நேரத்தில் கீழே இராமநாதபுரம் ஏரி நிரம்ப வேண்டும். அந்த மாதிரி கணக்கிட்டு வைத்திருக்கிறோம். கீழே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படாமல்தான் தண்ணீர் திறக்க முடியும்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

### விருதுநகர் மாவட்டம் - சாத்தூர் வட்டம் - பந்துவார்பட்டி கிராமத்தில்

# பட்டாசு ஆலை வெடிவிபத்து: உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 30-**

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், பந்துவார்பட்டி கிராமத்தில் பட்டாசு தயாரிக்கும் ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று இது குறித்து விடுத்த அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், பந்துவார்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு தயாரிக்கும் ஆலையில் இன்று (29.06.2024) காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் அச்சங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் (வயது 45), நடுச்சூரங்குடியைச் சேர்ந்த மாரிச்சாமி (வயது 40), வெம்பக்கோட்டை பகுதியைச் சேர்ந்த செல்வகுமார் (வயது 35) மற்றும் மோகன் (வயது 30) ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.


